[1977 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: சில முக்கியமான காரணங்களைக் கொண்டு அந்தப் பகுதிக்கு அரிசியை ரேஷன் கடைகள் மூலம் வழங்கத் தயாராக இல்லை.

நீலகிரியிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேர்தல்

*27. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரியிலுள்ள கலைக்கப்பட்ட கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கு இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் விரைவில் நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது பரிசீலனையில் இருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு சட்ட திருத்தங்கள் மீது முடிவு செய்த பிறகு தேர்தல்கள் நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. கே. உச்சி: தேர்தல் வெகு நாட்களாக நடக்காமையால் அந்த நிறுவனங்களில் மேலும் மேலும் ஊழல்கள் பல வளர ஏதுவாகின்றது. ஆகையால் உடனடியாகத் தேர்தல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: 10—6—1976 அன்று அமல் செய்யப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர் நியமனச் சட்டம் 1976 சட்டத்தின்படி தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள குழுக்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. குழுக்கள் நியமனம் செய்யப்பட்டதில் பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று பல்வேறு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதை எப்படிச் சீர்திருத்தி அமைப்பது என்ற முறையில் அரசு ஆலோசித்து வருகிறது. அதற்கான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று அரசு ஆலோசனை செய்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஆகஸ்ட் 6]

கொண்டிருக்கிறது. ஆலோசனை முடிவுற்று சட்டத் திருத்தங்கள் முறையாக ஏற்படுத்தப்பட்டவுடன தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்.

[முற்பகல் 10-10]

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையில் எந்தத் துறை, சென்ட்ரல் பாங்கா அல்லது வேறு எந்தத் துறை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? அது மட்டுமல்ல, இது நீலகிரியில் மட்டுமல்ல, மற்ற மற்ற மாவட்டங்களிலேயும் இருக்கிறதே அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே உள்ள

1. The Nilgiris Central Co-operative Bank.
2. The Nilgiris Co-operative Enterprises.
3. The Nilgiris Co-operative Marketing Society.
4. Gudalur Land Development Bank.
5. Coonoor Land Development Bank.
6. Kothagiri Land Development Bank.
7. The Nilgiris Co-operative Printing Works.

ஆகிய கூட்டுறவுச் சங்கங்களிலே இன்றைய தினம் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது ஏற்கெனவே உள்ள சட்ட விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அதற்கு காலதாமதமாகக்கூடும் என்றும் சொன்னார்கள். புதிய சட்டத்தை மாற்றியமைப்பதற்கு முன்பு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு நிர்வாகங்களில் ஐந்து பேர்கள் உள்ள கமிட்டிகளைப் போட்டால் தவறுகள் நடக்காது. அரசியல்வாதிகள்தான் தவறு செய்கிறார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், ஆனால் அதிகாரிகளிலேயும் தவறு செய்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு அப்படிப்பட்ட குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அரசு அப்படி நியமித்தாலும் அதுவும் நியமனமாகத்தான் ஆகும். நியமனம் வேண்டுமா, வேண்டாமா என்பதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிற போது அதே தவறை அரசாங்கம் நிச்சயமாகச் செய்யாது.

திரு. கே. உச்சி: கூட்டுறவு நிறுவனங்களில் தேர்தல் கொண்டு வரப்படும்போது, கட்சி சார்பற்ற முறையிலே கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: புதிதாக இந்த அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை சொன்னதற்காக மெத்த நன்றி.

திரு. நா. சுந்தரராஜ்: கூட்டுறவுத் துறையிலே ஊழல் சம்பந்தமாக தனி நபர் விசாரணைக் கமிஷன் வைக்கப்பட்டதா? அது சம்பந்தமான ரிப்போர்ட் கிடைத்திருக்கிறதா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தனி கமிஷனுடைய அறிக்கை எல்லா மாவட்ட மத்திய கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய அறிக்கையைக் கொடுத்தது. அது எல்லாவற்றைப்பற்றியும் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினை.

அரிசன நல மானியக் கோரிக்கைக்கு அதிக நேரம் ஒதுக்குவது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று அரிசன நல மானியக் கோரிக்கை. பொதுவாகவே வழக்கமாக புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS